## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.

**O.S No.124/2016** **Date:12.03.2025**
**(D.W–2 )**

திரு. நாகராஜன் த/பெ.சுந்தரம்
**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1) வாதியின் கட்டிடம் பழமையான கட்டிடம் என்றால் சரிதான். வாதியின் கட்டிடத்தினுடைய பத்திரங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சலூன் கடை உள்ள இடம் வாதிக்கு பத்திரப்படி பாத்தியப்பட்ட இடம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் கட்டிடம் வாதி வீடு கட்டிடத்தின் கொய்யா கட்டை காலை வைத்து தான் இனைத்து கட்டப்பட்டுள்ளது என்றும், சிமெண்ட் கால் வைத்து கட்டப்பட்டுள்ளது என்று நான் வழக்கிற்காக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் ஏற்கனவே திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.03.12 18:36:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி (முகூபொ),
அவிநாசி.